DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.621/2024**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ஜீவன்குமார் |
| Father Name | : | வெங்கடரமணா |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 22 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.
( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது ஆந்திராவில் வசித்து வருகிறேன். நான் HCL நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். **அ.சா.1** அன்வேஷ் மற்றும் **அ.சா.2** ஷேக் முகமது சர்ஜாத் ஆகியோர்கள் என் நண்பர்கள் ஆவார்கள். சம்பவ சமயத்தில் நானும் எனது மேற்படி நண்பர்களும் மதுரை HCL நிறுவனத்தில் இன்டன்சிப் ஆக பணிபுரிந்து வந்தோம். அப்போது 24.08.2022 ம் தேதியில் மாலை சுமார் 07.00 மணியளவில் நாங்கள் அன்றைய தின பணியை முடித்து, அலுவலகத்தில் இருந்து திரும்பி எங்களுடைய அறைக்கு செல்ல தேசிய நெடுஞ்சாலை பக்கம் வந்து கொண்டிருந்த போது, 1 மற்றும் 2 எதிரிகள் எங்களை சுற்றி வளைத்து **அ.சா.1** அன்வேஷிடமிருந்த அடையாள அட்டையை அதில் ஒருவர் பிடுங்கி எடுத்துக்கொண்டார். அந்த அட்டையை வாங்குவதற்காக **அ.சா.1** அன்வேஷ் அருகில் இருந்த நபர்களின் உதவியுடன் கேட்டுகொண்டிருந்த போது 1 மற்றும் 2 எதிரிகள் **அ.சா.1** அன்வேஷ் ஐ அருகில் இருந்த புதருக்குள் தள்ளிவிட்டு, எதிரிகளில் ஒருவர் கையில் போட்டிருந்த கடினமான காப்பு போன்ற வளையளை வைத்து **அ.சா.1** அன்வேஷின் வலது கண் பகுதிக்கு அருகில் குத்தி இரத்த காயத்தை ஏற்படுத்தினார். மேலும் எதிரிகள் **அ.சா.1** அன்வேஷ் ஐ தாக்கிதில்

அவருக்கு வலது சுண்டு விரலுக்கு பகுதியில் உள்ளங்கையில் இரத்த காயம் ஏற்பட்டது மற்றும் எதிரிகள் **அ.சா.1** அன்வேஷ் ஐ உடலில் பல இடங்களில் கைகளால் குத்தி காயங்களை ஏற்படுத்தினார்கள். மேலும் எதிரிகள் **அ.சா.1** அன்வேஷிடமிருந்து லேப்டாப் HP, Head Set, laptop chargers. தனிப்பட்ட wallet அதில் ஆதார் கார்டு, டெபிட் கார்டு மற்றும் IQ Mobile Phone ஆகியவற்றை எதிரிகள் பறித்துக்கொண்டார்கள். நாங்கள் பாண்டிகோவில் அருகே சிக்னலில் இருந்த பணியில் இருந்த போலீஸரிடம் வழக்கு சம்பவம் குறித்து தகவல் தெரிவித்தும் உடனே ஒரு போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்தார். உடனே நாங்கள் **அ.சா.1** அன்வேஷ் தாக்கப்பட்ட புதருக்கு இடையில் சென்று பார்த்து **அ.சா.1** அன்வேஷ் ஐ மீட்டு தேசிய நெடுஞ்சாலை பகுதிக்கு கொண்டு வந்தோம். பிறகு 108 அவசர ஊர்திக்கு அழைத்து நானும், அ.சா.2 முகமது சர்ஜாத் ஆகியோர்கள் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

**அ.சா.1** அன்வேஷ் ஐ நான் போலீஸார் உதவியுடன் தான் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் புதர் பகுதியில் இருந்து காப்பாற்றி அழைத்து வந்தோம். மேற்படி தகவலை நான் போலீஸார் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. **அ.சா.1** அன்வேஷ் மற்றும் நான், **அ.சா.2** முகமது சர்ஜாத் ஆகியோர்கள் பணிமுடிந்து திரும்பி ஒன்றாக சேர்ந்து தான் எங்கள் அறைக்கு சென்றுகொண்டிருந்தோம். நாங்கள் அனைவரும் வேலை முடிந்து தேசிய நெடுஞ்சாலை வழியாகத்தான் எங்கள் அறைக்கு சென்றுகொண்டிருந்தோம். போலீஸார் விசாரணையில் நாங்கள் அனைவரும் ஏவிஎஸ் பஸ் கம்பெனி அருகே உள்ள முள் பாதை வழியாக சென்றதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான், அந்த பகுதி தேசிய நெடுஞ்சாலையோடு சேர்ந்து உள்ளது. மேற்படி முள்பகுதி நெடுஞ்சாலையில் இருந்து சுமார் 70 மீ முதல் 80 மீட்டர் தொலைவில் உள்ளது, அங்கு தான் **அ.சா.1** அன்வேஷ் ஐ எதிரிகள் அழைத்துசென்றார்கள்.

ஆஜர் எதிரிகளை நான் **அ.சா.1** அன்வேஷ்ஜ தாக்கும் போது பார்த்தேன். போலீஸ் விசாரணையில் ஆஜர் எதிரிகளை 26.08.2022ம் தேதியில் தான் அடையாளம் காட்டியதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான், 1 மற்றும் 2 எதிரிகளை சம்பவம் நடந்த 24.08.2022ம் தேதி சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை பார்த்த பின்பு அவர்களை காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டியதாக குறிப்பிட்டுள்ளேன். நான் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் வைத்தும் மற்றும் காவல்நிலையத்தில் வைத்தும் ஆஜர் எதிரிகளை பார்க்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி சம்பவத்தன்று எதிரிகள் முதலில் எங்களில் யாரிடம் முதலில் பேசினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் எனது நண்பர் **அ.சா.1** அன்வேஷ்க்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி ஆங்கிலத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு தமிழில் மொழிபெயர்த்து சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.02 18:19:48 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.